2024 பிப்ரவரி 22] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

உரம், 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு போன்றவற்றையெல்லாம் செய்திட வேண்டும். அது உழவியல் முறை. உயிரி முறையில், "கோகோ கான்" என்ற எதிர் உயிரி கலவையை ஏக்கருக்கு 5 லிட்டர் அளவில் மண்ணில் இட வேண்டும். இரசாயன முறையில் மரத்திற்கு ஜிப்சம் 1 கிலோ, மக்னீசியம் சல்பேட் அரை கிலோ போன்றவற்றையெல்லாம் செய்திட வேண்டும். இந்த முறைகளையெல்லாம் செய்யும்போது, தென்னை மரங்களை நோய்களிலிருந்து காப்பாற்றக்கூடிய வாய்ப்புகள் உருவாகும்.

பிற்பகல் 1–15

ஆகவே, இத்தகைய முயற்சிகளை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) இந்தப் பதிலுரையில், போதுமான அளவிற்கு கருத்துகளை வழங்கியிருக்கின்றோம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுடைய மகிழ்ச்சியான ஆதரவு, இதற்கு ஓர் உதாரணமாக இருக்கிறது. இந்த வேளாண்மை நிதிநிலை அறிக்கைக்கு யாரும் எதிர்ப்புக் குரல் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாடிவிட்டார்; நாம் பாடமுடியவில்லை. (சிரிப்பு) இதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து, விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

6. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவான பதிலைக் கூறிவிட்டார்கள். அதன்பின்னர், அவர்களிடம் சொல்வதற்கு ஒன்றுமில்லை. அனைவருக்கும் சேர்த்து நான் நன்றி சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. துரைமுருகன்] [2024 பிப்ரவரி 22

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2024) மற்றும் 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2024) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2024), மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2024)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 21-2-2024 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.